**THE LABOUR COURT, SALEM**
**CAMP COURT AT DHARMAPURI**
**I.D.No. 66 of 2022**

<u>19.09.2025</u>

**RW1 – திருமதி. காயத்ரா**

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை – (மனுதாரர் தரப்பில்)

எதிர்மனுதாரர் நிறுவனம் தாக்கல் செய்த பதிலுரையில் பத்தி 5ல் 14.07.2022 முதல் மனுதாரருக்கு பணி கொடுக்கமுடியாத நிலை ஏற்பட்டது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலம் பத்தி 2ல் 6 வது வரியிலிருந்து பத்தி இறுதிவரை நான் சொல்லியுளள சங்கதிகளும், 5வது பத்தி 4 வரியிலிருந்து பத்தி இறுதிவரை சொல்லியுள்ள சாட்சியம் நிர்வாகம் தாக்க்ல் செய்த பதிலுரையில் தொழிலாளர் ஆணையர் முன்பு நிர்வாகம் தாக்கல் செய்த பதிலுரையிலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நிர்வாகம் தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு தாக்கல் செய்த Ex.R5 பதிலுரையில் இறுதி பத்தியில் பால்பொருட்களின் உற்பத்தி குறைாவாக உள்ளதாலும், பணியாளர்களின் எண்ணிக்கை உற்பத்தி திறனுக்கு மிகுந்து காணப்படுவதாலும் மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டியதாயிற்று என சொல்லப்ப்ட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரர் தொழிற்தகராறு சட்டப்படி தொழிலாளர் அல்ல என்று தொழிலாளர் உதவி ஆணையர் முன்பும் இந்த நீதிமன்றத்திலும் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மனுதாரருடைய பணிநியமண உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவருக்கு கொடுக்கப்பட்ட பணிநியமண உத்தரவில் நிறுவனத்தின் சான்றளிக்க்ப்பட்ட நிலையாணைக்கு கட்டுப்பட்டவர் என சொல்லப்பட்டுளளது என்றால் சரிதான். மனுதாரருக்கு

14.07.2022 ல் பணி மறுக்கப்பட்ட பிறகு 16.07.2022, 21.07.2022 தேதிகளில் பதிவு தபால்களை அனுப்பி வேலை கோரியுள்ளார் என்றால் சரிதான். இந்த 2 கடிதங்கள் குறித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும், என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்திலும் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரருடைய பணிதொடர்பான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தரநிர்ணய துறையிலிருந்து அதிகாரிகளோ, சக பணியாளர்களோ மனுதார்ர் மீது எந்த புகார்களும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 14.07.2022 க்கு முந்தைய காலகட்டத்தில் மனுதாரர் மீது எந்த ஒழுங்கு நடவடிக்கையோ, தண்டன உத்தரவோ நிலுவையில் இல்லலை என்றால் சரிதான். 14.07.2022 க்கு பிறகு மனுதாரரை பணிக்கு ஆஜராக்ச்சொல்லி அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான் . 14.07.2022 முதல் மனுதாரருக்கு பணி கொடுக்கமுடியாத சூழ்நிலை குறித்து உத்தரவோ, அவருக்கு நஷ்டஈடோ கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். சட்டத்திற்கும், இயற்கை நீதிக்கும் எங்களுடைய நிலையாணைக்கும் புறம்பாக மனுதாரரை வாய்மொழியாக பணிநீக்கம் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மனு பரிகாரத்தை கொடுக்க நிர்வாகம் கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem